1978 மார்ச் 9]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய சொந்த ஊரான நெகமம் என்ற பெயரிலே ஒன்றியம் அமைக்கவேண்டுமென்ற முறையில் அவர்கள் ஆர்வத்தோடு இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவைகள் எல்லாம் முறையாக அரசுக்கு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

கலப்புத் திருமணங்கள்.

* 414 வினா—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-க்கு முன் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களிடமிருந்து சலுகைகள் கோரி விண்ணப்பங்கள் ஏதேனும் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனின், அவைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, 1967-ஆம் ஆண்டுக்கு முன்னாலே கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு சலுகைகள் கோரி விண்ணப்பங்கள் எதுவும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அப்படி கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் பலமுறைகள் விண்ணப்பங்கள் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறதே, தந்தை பெரியார் அவர்களின் அடிச்சுவற்றில் அறிஞர் அண்ணா அவர்கள் ஜாதி சமயமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற முறையில் கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கின்ற முறையிலே தன்னுடைய ஆட்சிக் காலத்திலே சிறப்பான திட்டத்தை உருவாக்கினார், ஆகவே, 1967-ம் ஆண்டுக்கு முன்னாலேயே கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு இந்தத் திருமணங்களை ஊக்குவிக்கின்ற முறையிலே அந்தச் சலுகைகளை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மூல வினாவிற்கு அப்படிப்பட்ட கோரிக்கைகள் எதுவும் வரவில்லை என்று சொல்லி இருக்கிறேன். அப்படி வருமானால் பரிசீலிக்ககப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

திரு. மி. வின்சென்ட் ; தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் என்ன என்ன? கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுடைய குழந்தைகளுக்கு, மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் உள்ளவர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள் அனைத்தையும் அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு முதலிலே $1\frac{1}{2}$ சவரன் தங்கப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது.

பின், படிப்படியாக ரூபாய் 200 ரொக்கப் பரிசு, சென்னை நகர் தவிர பிற மாவட்டங்களில் அரிசனங்களுக்கென்று கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் மூன்று சென்ட் பரப்புள்ள வீட்டுமனை, சிறு கடன் உதவித் தொகை முதலிய சலுகைகள் அளிக்கப்படுகிறது. சென்னை நகரில் மாதம் ரூபாய் 250-க்குக் குறைந்த வருமானமுள்ள கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு தவணைக் கொள் முதல் திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் 10 குடியிருப்புக்களை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒதுக்கித் தரும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தாழ்த்தப்பட்டவர்க்குள்ள 10 சதவீத ஒதுக்கீட்டில் வீட்டு மனைகள்/வீடுகள், கலப்பு மணத் தம்பதிகளுக்கும் ஒதுக்கித் தரும். இதற்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கும் கொடுக்க வேண்டிய தொகையில் ரூபாய் 1,200-க்கு மேற்படாமல் அரசு மான்யமாக வழங்கும்

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் எந்த ஆண்டு துவக்கப்பட்டது. அதன் உள் நோக்கம் என்ன? கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு இதுவரையில் உதவி செய்யப்பட்டிருக்கிறதா? எத்தனை பேர்களுக்குத் தங்கப் பதக்கம் கொடுக்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஜாதிமத வேற்றுமையை ஒழிக்க வேண்டுமென்பதற்காகவும், ஒரு சமதர்ம புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காகவும், ஜாதிக் கொடுமையை ஒழிப்பதற்கு இதுவொரு வழியாக இருக்கும் என்று கருதியும் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், 1967-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ம் தேதியில் இந்தத் திட்டம் துவக்கப்பட்டது. இது வரையில்; 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் 573 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வினா எண். 415.

1978 மார்ச் 9]

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் மானியக் கோரிக்கையில் வரப்போகிறது. அப்பொழுது நிம்மதியாகப் பேசலாம்.

மாவுத்தம்பதி மலைச்சாதி மக்களுக்கு வீடுகள்.

*415 வினு— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், மாவுத்தம்பதியிலுள்ள மலைசாதி மக்களுக்கு வீடு கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு எவ்வளவு வீடுகள் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) இல்லை.

(ஆ) வினு எழாது.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, அங்கு மலைசாதி மக்கள் ஏராளமாக வசிக்கின்ற காரணத்தால் அவர்கள் வீடேயில்லாமல் சிறு சிறு குடிசைகளில் வாழ்ந்து வருகிருர்கள். மேற்கொண்டாவது அவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மலைசாதி மக்களுக்கு வீடு கட்டித் தருகின்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அந்தப் பகுதியில் குடிசைகளில் வாழ்கிருர்கள் என்பது உண்மை. அரசு இதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, குடியரசுத் தலைவரின் ஆட்சிக் காலத்தில் ஆதிவாசி மக்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை நிறுத்தி வைத்துள்ளனர் என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன காரணம் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஆதிவாசிகளுக்கு வீடு கட்டித் தருகிற திட்டம் கொஞ்சம் நிறுத்தப்பட்டது. வீடுகளின் வடிவமைப்பை மாற்றியமைக்கலாமா என்று அறிய வேண்டுமென்பதற்காக திரு. செல்வம் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் அறிக்கையை எதிர் பார்த்த காரணத்தால் அந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படவில்லை.